[17th July 1957

THE HON. SRI M. A. MANICKAVELU : I think very useful work is being done in the City, and in the mufassal, private agencies and local bodies are starting these creches. The Government give some subsidy to the local bodies and in this case, a grant of Rs. 10,000 has been given.

SRI V. K. KOTHANDARAMAN : சென்னை கார்பரேஷனுக்கு கொடுக்கப்பட்டதுபோல் இது போன்று கிராண்டுகள் மற்ற நகரசபைகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? இல்லையென்று சொன்னால், எல்லா நகரசபைகளுக்கும் கொடுக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நகரசபை இதை ஆரம்பித்து செய்வதற்கு முன்வந்தால்தான், கிராண்டு கொடுக்கப்படுமே தவிர, அவர்கள் சும்மா உட்கார்ந்திருந்தால் அரசாங்கமே கொடுக்க வழியில்லை.

SRI K. VINAYAKAM : Are the Government aware that the creche established in Ashok Vihar is one of the model ones in the entire Far East, which has even been praised by no less a person than the Prime Minister of India?

THE HON. SRI M. A. MANICKAVELU : I thought from the previous question of the hon. Member, he was not satisfied with the working of the creches. From what he says now, he seems very much satisfied.

Labour Courts

* 132 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisamy) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to constitute additional Labour Courts and if so, when and where?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. The matter is under consideration.

SRI S. PAKKIRISAMI PILLAI : லேபர் கோர்ட்டுகள் எந்தெந்த இடத்திலே அமைப்பதாக உத்தேசம் இருக்கிறது ? இப்பொழுது இருக்கும் படியான லேபர் கோர்ட்டுகளுக்கு சிறிய சிறிய தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் குறைகளை அனுப்பாத ஒரு நிலைமையிலே லேபர் டிபார்ட்மெண்ட் அதிகாரிகள் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பது உண்மையா ?

THE HON. SRI R. VENKATARAMAN : முதல் கேள்விக்கு பதில், இப்பொழுது கோயம்புத்தூரிலும், சென்னையிலும் ஒரு லேபர் கோர்ட்டு இருக்கிறது. மூன்றாவதாக மதுரையிலே ஒரு லேபர் கோர்ட்டு அமைப்பதாக உத்தேசம். இரண்டாவது கேள்விக்கு, லேபர் மான்ய விவாதத்தின் போது கனம் அங்கத்தினர் அவர்கள் இதுபற்றி கடுமையாக கண்டிப்பார் என்று எதிர்பார்க்கிறேன்.

SRI P. S. CHINNADURAI : லேபர் கோர்ட்டுகளுக்கு நீதிபதிகளை நியமிக்கும்பொழுது சோஷலிஸ்டு கண்ணோட்டம் உள்ளவர்களையும், சோஷலிஸ்டு தத்துவத்தில் நம்பிக்கை உள்ளவர்களையும் நியமிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : "இண்டஸ்டிரியல் டிஸ்பியூட்ஸ் ஆக்ட்" பிரகாரம் இந்த கோர்ட்டுகளுக்கு நீதிபதிகளை நியமிக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. நீதிபதிகளை உயர்நீதி மன்றம் சிபார்சு செய்கிறது.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—POINT OF ORDER *RE* STATEMENT OF THE HON. LEADER OF THE HOUSE *RE PER CAPITA* INCOME IN THE STATE.

*SRI K. ANBAZHAGAN : On a point of order, Sir. தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் சில நாட்களுக்கு முன்னால் கனம் நிதி அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் ஒரு குறிப்பு தெரிவித்தார். அந்தக் குறிப்பு உண்மை அல்ல என்று காணப்படுகிறது. அதுபற்றிய விளக்கம் நான் ஒழுங்கின்மீது கேட்டறிய விரும்புகிறேன்.

சென்னை மாகாணத்தினுடைய சராசரி வருஷ வருமானம் (*per capita* income) கேரள சர்க்காரின் சராசரி வருஷ வருமானத்தைவிட குறைவு என்றும், நம்முடைய ராஜ்ய மக்களுக்கு இன்றைக்கு கிடைக்கும் சராசரி வருஷத்திய வருமானம் (*per capita* income) ரூ. 257 என்றும், கேரள ராஜ்யத்தில் (*per eapita* income) ரூ. 311 என்றும் கனம் நிதி அமைச்சர் அவர்கள் வரவு செலவு திட்ட விவாதத்திற்குப் பதில் அளிக்கும் பொழுது தெரிவித்தார்கள் இந்த மன்றத்திலே. ஆனால் கேரள நாட்டு மக்களுடைய சராசரி வருமானம் (*per capita* income) ரூ. 219 தான் என்றும், அவர்களுடைய மொத்த வருஷ வருமானம் (National Income) ரூ. 319 கோடி என்றும் புள்ளி விவரங்கள் அந்த அரசாங்கத்தினுடைய Statistic Department அல்லது புள்ளி விவரக் குறிப்பு இலாகாவினாலே தரப்படுகிறது என்பதை நான் தெரிவித்து, இதுபற்றி உண்மை என்ன, அவர்கள் தெரிவித்ததுதான் உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : If the Hon. the Finance Minister wants to say anything, he may do so.

THE HON. SRI C. SUBRAMANIAM : It is not a point of order. He may raise the issue when the Appropriation Bill is discussed and certainly I will give an answer.

MR. SPEAKER : The hon. Member does not expect the Minister to give an answer on a point of order, I suppose.

TH- HON. SRI C. SUBRAMANIAM : I can answer it, but . . .

MR. SPEAKER : I will not allow it. We shall take this up during the discussion on the Appropriation Bill.

III.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER *RE* ELECTION OF THREE MEMBERS TO THE SENATE OF THE ANNAMALAI UNIVERSITY.

MR. SPEAKER : I have to announce to the House that the Vice-Chancellor of the Annamalai University has requested me to arrange for the election of three Members to the Senate of the Annamalai University by the Members of the Madras Legislative Assembly from among themselves.

Under section 15 clause III, sub-section (3) of the Annamalai University Act, 1928, the election is to be held according to the principle of proportional representation by means of the single transferable vote.